RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 148 | ஜுன்.3, 2025 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## ‘ஸ்டாலின் சாரே நினைத்தாலும் அந்த சாரை காப்பாற்ற முடியாது’ : எடப்பாடி பழனிசாமி



சென்னை: ஜுன்.3-

“ஞானசேகரன் மட்டுமே குற்றவாளி என்று அவசர, அவசரமாக இந்த வழக்கை முடிக்க திமுக அரசு முனைந்தது ஏன்? SIRஐ காப்பாற்றியது யார் ? இந்த கேள்விகள் கேள்விகளாகவே நீண்ட நாட்கள் இருக்காது. ஸ்டாலின் சாரே நினைத்தாலும், அந்த SIRஐ எந்த சாராலும் காப்பாற்ற முடியாது.” என்று அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

அண்ணா பல்கலைக்கழக மாணவி வன்கொடுமை வழக்கில் இன்று காலை தண்டனை விவரம் அறிவிக்கப்பட்டது. அதில் குற்றவாளி ஞானசேகரனுக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. 30 ஆண்டுகள் சிறைத் தண்டனையை எந்தவித தண்டனைக் குறைப்புமின்றி ஞானசேகரன் அனுபவிக்க வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில் தண்டனை விவரம் வெளியான சில நிமிடங்களில் எடப்பாடி பழனிசாமி தனது எக்ஸ் சமூகவலைதளப் பக்கத்தில் பகிர்ந்த பதிவில், “ஞானசேகரன் மட்டுமே குற்றவாளி என்று அவசர, அவசரமாக இந்த வழக்கை முடிக்க திமுக அரசு முனைந்தது ஏன்? SIRஐ காப்பாற்றியது யார் ? இந்த கேள்விகள் கேள்விகளாகவே நீண்ட நாட்கள் இருக்காது. ஸ்டாலின் சாரே நினைத்தாலும், அந்த SIRஐ எந்த சாராலும் காப்பாற்ற முடியாது.” என்று பதிவிட்டிருந்தார்.

அந்தப் பதிவின் முழு விவரம்: அண்ணா பல்கலை. பாலியல் வழக்கின் குற்றவாளியான திமுக அனுதாபி ஞானசேகரனுக்கு ஆயுள் தண்டனை விதித்துள்ளது சென்னை மகளிர் நீதிமன்றம். இந்த வழக்கில் குற்றவாளி திமுக ஞானசேகரனைக் காப்பாற்ற எத்தனையோ சித்து வேலைகளை செய்தது ஸ்டாலின் மாடல் திமுக அரசு.

அத்தனையும் முறியடித்து, மக்கள் மன்றம் முதல் சமூக ஊடகங்கள் வரை தனது தொடர் போராட்டத்தால் இந்த வழக்கின் குற்றவாளிகளில் ஒருவனான திமுக அனுதாபி ஞானசேகரனுக்கு தண்டனையை சாத்தியப்படுத்தியுள்ளது அதிமுக.

பாதிக்கப்பட்ட மாணவியின் குரலாக அஇஅதிமுக தொடர்ந்து ஒலிக்கும் என்ற வாக்குறுதியை இன்றுவரை நிறைவேற்றி வருகிறோம். அதனால் தான் #யார்_அந்த_SIR என்ற முழுமையான நீதிக்கான கேள்வியை இன்றும் கேட்கிறோம்.

FIRல் குறிப்பிடப்பட்ட அந்த SIR யார்? விசாரணையின் போதே அந்த SIR Ruled-out செய்யப்பட்டது ஏன்? எதற்காக ஞானசேகரன் மட்டுமே குற்றவாளி என்று அவசர அவசரமாக இந்த வழக்கை முடிக்க முனைந்தது திமுக அரசு? SIRஐ காப்பாற்றியது யார் ? இந்த கேள்விகள் கேள்விகளாகவே நீண்ட நாட்கள் இருக்காது. அதிமுக ஆட்சி அமைந்ததும், அனைத்து பதில்களும் கிடைக்கத் தான் போகிறது. ஸ்டாலின் சாரே நினைத்தாலும், அந்த SIR-ஐ எந்த சாராலும் காப்பாற்ற முடியாது!. இவ்வாறு எடப்பாடி பழனிசாமி அந்தப் பதிவில் குறிப்பிட்டிருந்தார்.

# ‘துணி மறைப்பால் உண்மையை மறைக்க இது பாஜக மாடல் அல்ல’

## பந்தல்குடி சம்பவம் பற்றி ஸ்டாலின் விளக்கம்



சென்னை: ஜுன்.3-

“பந்தல்குடி எனுமிடத்தில் என் பார்வைக்குப் படாதபடி கால்வாயைத் துணியைக் கட்டி மறைத்திருக்கிறார்கள் என்று ஊடகங்களில் செய்தி வெளியாக, அது குறித்து சமூக வலைத்தளங்களில் விமர்சனக் கருத்துகளும் பதிவான நிலையில், உடனே அதனை அகற்றச் சொன்னேன். அதுமட்டுமல்ல, அந்த இடத்துக்குச் சென்று ஆய்வு செய்தேன். துணி மறைப்பு கட்டி, உண்மை நிலையை உலகத் தலைவர்களின் கண்களிலிருந்து மறைக்கும் பாஜக மாடல் இதுவல்ல, இது திராவிட மாடல்” என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக கட்சித் தொண்டர்களுக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது: “திமுக பொதுக்குழு மதுரை மாநகரில் மற்றொரு சித்திரைத் திருவிழா போல நடந்து, கட்சி வரலாற்றில் முத்திரை பதித்திருக்கிறது. மே 31 மாலையில் மதுரை விமான நிலையத்திலிருந்து 22 கி.மீ. தூரத்துக்கான ரோடுஷோவில் சாலையின் இருபுறமும் மக்கள் திரண்டு நின்று அன்பை வெளிப்படுத்தினர். சிறுவர் சிறுமியர், பள்ளி கல்லூரி மாணவர்கள், பெண்கள், வயதில் மூத்தவர்கள் என எல்லா வயதினரும் கையசைத்தும், கை கொடுத்தும், செல்ஃபி எடுத்தும், இருவண்ணக் கொடியை அசைத்தும் வரவேற்பளித்தனர்.

ரோடுஷோ வழியில் பந்தல்குடி எனுமிடத்தில் பகுதியை முதல்வரான என் பார்வைக்குப் படாதபடி கால்வாயைத் துணியைக் கட்டி மறைத்திருக்கிறார்கள் என்று ஊடகங்களில் செய்தி வெளியாக, அது குறித்து சமூக வலைத்தளங்களில் விமர்சனக் கருத்துகளும் பதிவான நிலையில், உடனே அதனை அகற்றச் சொன்னேன்.

அதுமட்டுமல்ல, அந்த இடத்துக்கு மாலை சென்றபோது, என் வாகனத்தை விட்டு இறங்கி, அமைச்சர்கள் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், மூர்த்தி, மாவட்ட ஆட்சியர், அதிகாரிகளுடன் பார்வையிட்டு, கால்வாயைத் தூய்மைப்படுத்தும் பணிகள் என்ன நிலையில் இருக்கின்றன என்ற விவரத்தையும் கேட்டு, அதனை விரைவுபடுத்தவும் உத்தரவிட்டேன்.

துணி மறைப்பு கட்டி, உண்மை நிலையை உலகத் தலைவர்களின் கண்களிலிருந்து மறைக்கும் பாஜக மாடல் இதுவல்ல, இது திராவிட மாடல். மறைப்பை அகற்றி, மறைக்கப்படுவதைக் கண்டறிந்து, உடனடியாக முழுமையான தீர்வுக்கான வழி செய்யும் மாடல் என்பது பொதுமக்களுக்கு மட்டுமின்றி, திமுகவை விமர்சிப்பதையே முழுநேர , பகுதிநேரத் தொழிலாகக் கொண்டிருப்பவர்களுக்கும் புரிந்திருக்கும்.

பொதுக்குழு இதயம் என்றால், அதில் தொண்டர்களின் குரல்தான் இதயத்துடிப்பு. அந்தத் துடிப்பின் ஓசை எப்படி இருக்கிறது என்பதைக் கட்சித் தலைவர் என்ற முறையில் உங்களில் ஒருவனான நான் கவனமாகக் கேட்டுக் கொண்டேன். நான் தலைமையுரையாற்ற எழுந்தபோது, எதிரில் இருப்பவர்கள் ஏழாயிரம் பேராகத் தெரியவில்லை. இரண்டு கோடி உறுப்பினர்களான தொண்டர்கள் அத்தனை பேரையும் மனக்கண்ணால் பார்த்தபடிதான் பேச்சைத் தொடங்கினேன்.

தொண்டர்களை நிர்வாகிகள் மதித்து, அரவணைத்து, அவர்களின் கோரிக்கைகளை அறிந்து செயல்படவேண்டும் என்பதே என் தலைமையுரையின் முக்கியப் பகுதியாகும். தொண்டனாகத்தான் என் கட்சிப் பணி தொடங்கியது. தொண்டர்களுடன்தான் என் கட்சிப் பணி தொடர்ந்தது. தொண்டர்களால்தான் கட்சியின் தலைவர் என்ற பொறுப்பை நான் சுமந்திருக்கிறேன். இப்போதும் கட்சியின் முதன்மைத் தொண்டன் என்பதில்தான் நான் பெருமை கொள்கிறேன்.

உங்களை நம்பித்தான் ‘ஓரணியில் தமிழ்நாடு’ என்கிற இந்தத் திட்டத்தை அறிவித்திருக்கிறேன். உங்கள் உழைப்பால் 2026 சட்டமன்றத் தேர்தலில் திமுக மகத்தான வெற்றி பெற்று ஆட்சியைத் தொடரும்,” என்று அவர் கூறியுள்ளார்.





■ மதுரை மாநகராட்சி சாத்தமங்கலம் நடுநிலைப்பள்ளியில் எல்.கே.ஜி. மற்றும் யு.கே.ஜி. பயிலும் மாணவ, மாணவிகளுக்கு மதுரை மாநகராட்சியின் சார்பில் புத்தகங்கள், நோட்டுகள், சீருடைகள் மற்றும் விளையாட்டு உபகரணங்களை மாண்புமிகு மேயர் இந்திராணி பொன்வசந்த் , ஆணையாளர் சித்ரா விஜயன், இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் வழங்கினார்கள் அருகில் துணை மேயர் தி.நாகராஜன் , மண்டலத் தலைவர் சரவணபுவனேஸ்வரி , கல்விக்குழுத் தலைவர் .ரவிச்சந்திரன் , கல்வி அலுவலர் ஜெய்சங்கர் அவர்கள், மாமன்ற உறுப்பினர் பாண்டீஸ்வரி ஆகியோர் உடன் உள்ளனர்.



## அரசு பள்ளி மற்றும் நிதி உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கு அரசால் வழங்கப்படும் நோட்டு புத்தகம் சீருடை உள்ளிட்ட உபகரணங்களை பள்ளி திறந்த முதல் நாளே வழங்கினர்

வேலூர் ஜூன்.03

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, கொணவட்டம், அரசு மேல்நிலைப்பள்ளியில் நோட்டு புத்தகம் சீருடை வழங்கும் விழா, வேலூர் மாவட்டத்தில் 2025-2026 ஆம் கல்வி ஆண்டிற்கான பள்ளிகள் 02.06.2025 திங்கட்கிழமை அன்று திறக்கப்பட்டதை தொடர்ந்து, அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கு விலையில்லாப் பாடப்புத்தகங்கள், குறிப்பேடுகள், சீருடைகள் உள்ளிட்ட உபகரண பொருட்களை மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி வழங்கினர். இந்நிகழ்ச்சியில் மக்கள் பிரதிநிதிகள் கார்த்திகேயன், சுஜாதா, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொ) தயாளன், தலைமை ஆசிரியர் ஷாம் கமல் ராஜ், உதவி தலைமை ஆசிரியர்கள் வெங்கடேசன், காமராசு மற்றும் ஆசிரியர் பெருமக்கள், பள்ளி மாணவ மாணவிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மாணவி வன்கொடுமை குறித்த எஃப்ஐஆர் கசியவிட்ட வழக்கிலும் நடவடிக்கை தேவை: சிபிஎம்

சென்னை: ஜூன்.3-



“அண்ணா பல்கலைக்கழக பாலியல் வன்முறை வழக்கின் விபரங்களுடன், பாதிக்கப்பட்ட பெண் அடையாளங்களை உள்ளடக்கிய முதல் தகவல் அறிக்கை கசியவிட்ட வழக்கில் தேசிய தகவல் மையம் உள்பட விசாரித்து இதுபோன்ற தவறுகள் மீண்டும் நடக்காத விதத்தில் கடும் நடவடிக்கையை உறுதி செய்ய வேண்டும்,” என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் பெ.சண்முகம் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: சென்னையில், அண்ணா பல்கலைக்கழக வளாகத்துக்குள் நடந்த பாலியல் வன்கொடுமை வழக்கில், குற்றவாளி ஞானசேகரனுக்கு 30 ஆண்டுகள் ஆயுள் தண்டனை விதித்து சென்னை மகளிர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. இந்த தீர்ப்பினை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயற்குழு வரவேற்கிறது.

சென்னை, அண்ணா பல்கலைக்கழக வளாகத்துக்குள் மாணவி ஒருவர் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டார். பாதிக்கப்பட்ட மாணவி, காவல்துறையில் புகார் அளித்த நிலையில், துரிதமான செயல்பாட்டை வலியுறுத்தி, இந்திய மாணவர் சங்கம் (எஸ்.எப்.ஐ) மற்றும் அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தினர் உடனடியாக பல்கலை கழகத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். நாடு முழுவதும் பெரும் கவனம் ஈர்க்கப்பட்ட இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட பெண்ணின் விபரங்களோடு முதல் தகவல் அறிக்கை கசிந்தது. அது தொடர்பாகவும் தனியாக வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை நடந்து வருகிறது.

இந்த வழக்கில் சென்னை உயர் நீதிமன்ற தலையீட்டின் பேரில் 3 பெண் ஐபிஎஸ் அதிகாரிகள் கொண்ட புலன் விசாரணைக்குழு நியமிக்கப்பட்டு, குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தனர். 29 சாட்சியங்கள், நூற்றுக்கும் மேற்பட்ட ஆதாரங்கள் அதில் பட்டியலிடப்பட்டிருந்தன. இந்த வழக்கை விரைவாக விசாரித்த மகளிர் நீதிமன்றம் ஒரு சில மாதங்களிலேயே குற்றத்தை உறுதி செய்து தீர்ப்பளித்திருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

சட்டங்கள் எவ்வளவு கடுமையாக இருந்தாலும் விசாரணை அமைப்புகளும், நீதிமன்றங்களும் உரிய வேகத்தில் செயல்பட்டு குற்றமிழைத்தவர்களை சட்டத்தின் பிடியில் நிறுத்தினால்தான் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை கட்டுப்படுத்த முடியும். அதிலும் கல்வி வளாகத்துக்குள் நடக்கும் இதுபோன்ற குற்றச் சம்பவங்களை கட்டுப்படுத்த அதிவிரைவான நடவடிக்கைகளை மேற்கொள்வது, பெண் முன்னேற்றம், பெண் கல்வி என்ற நோக்கிலும் மிக முக்கியமானதாகும்.

இந்த வழக்கில் குற்றமிழைத்த ஞானசேகரனுக்கு எதிராக 11 பிரிவுகளில் குற்றம் நிருபணமாகியுள்ள நிலையில், 30 ஆண்டுகள் தண்டனைக் குறைப்பில்லாமல் ஆயுள் தண்டனையுடன் ரூ.90 ஆயிரம் அபராதமும் விதித்து மகளிர் நீதிமன்ற நீதிபதி ராஜலட்சுமி தீர்ப்பளித்திருக்கிறார். குற்றப்பத்திரிக்கையில் பதிவு செய்யப்பட்டிருந்த மொத்தம் 12 குற்றச்சாட்டுக்களில் பதினொன்றில் குற்றம் உறுதியாகியுள்ளது. இதற்காக உறுதியுடன் செயல்பட்ட விசாரணை அதிகாரிகள், வழக்கறிஞர்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள்.

இதுபோன்ற குற்றங்கள் நடைபெறாமல் தடுக்கும் விதத்தில் கல்வி வளாகங்களில் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகளை உறுதி செய்திட வேண்டும். போதுமான சிசிடிவி கேமராக்கள் மற்றும் காவலர்களை பயன்படுத்துவதுடன், வளாகத்துக்கு தொடர்பற்ற நபர்கள் உள்ளே புகாத விதத்தில் பாதுகாப்பான சூழலை கல்வி நிறுவனங்கள் உறுதி செய்திட அரசு தொடர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்துகிறோம்.

மேலும், இந்த பாலியல் வன்முறை வழக்கின் விபரங்களுடன், பாதிக்கப்பட்ட பெண் அடையாளங்களை உள்ளடக்கிய முதல் தகவல் அறிக்கை கசியவிட்ட வழக்கில் தேசிய தகவல் மையம் உள்பட விசாரித்து இதுபோன்ற தவறுகள் மீண்டும் நடக்காத விதத்தில் கடும் நடவடிக்கையை உறுதி செய்யவேண்டும், என்று அவர் கூறியுள்ளார்.

## கோடை விடுமுறை முடிந்து பள்ளிகள் திறப்பு! மாணவ மாணவிகளுக்கு நோட்புக் வழங்கிய எம்எல்ஏ



மானாமதுரை ஜூன்.03

தமிழகத்தில் கோடை விடுமுறை முடிந்து பள்ளிகள் நேற்று (ஜூன் 2) திறக்கப்பட்டது. இதற்கான வளாகப் பராமரிப்பு உள்ளிட்ட பல்வேறு முன்னேற்பாடுகள் பள்ளிகள் தரப்பில் முடிக்கப்பட்டு தயார் நிலையில் இருந்தது. மேலும், பள்ளிகள் திறக்கும் முதல் நாளிலேயே அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு விலையில்லா பாடநூல்கள், நோட்டுப் புத்தகங்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

புதிய கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகள் வழங்கப்படும் வரை ஏற்கெனவே உள்ள பழைய அட்டையைக் பயன்படுத்தி மாணவர்கள் பயணிக்கலாம் என போக்குவரத்துத் துறை அறிவுறுத்தியுள்ளது. இதனிடையே பள்ளி வேலை நாட்கள், தேர்வுகள், விடுமுறை, ஆசிரியர் பயிற்சி, அட்டவணை உயர்கல்வி வழிகாட்டி முகாம் உள்பட பல்வேறு விவரங்கள் அடங்கிய 2025 2026 ஆம் கல்வியாண்டுக்கான நாள்காட்டியை பள்ளிக் கல்வித் துறை சார்பில் வெளியிடப்பட்டது

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் பர்மா காலணி அரசு நடுநிலைப் பள்ளியில் நேற்று



மாணவிகளுக்கு முன்னாள் அமைச்சரும் மானாமதுரை சட்டமன்ற தொகுதி உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார் விலையில்லா சீருடைகள் ,நோட்புக் ,ஸ்கூல் பேக் ,ஷூ ஆகியவற்றை மாணவிகளுக்கு வழங்கி அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்தார்.இந்த நிகழ்ச்சியில் பள்ளி மாவட்ட தொடக்கக்கல்வி அலுவலர் பானு,தலைமை ஆசிரியர் (பொறுப்பு) அழகர்சாமி, மானாமதுரை திமுக நகர் செயலாளர் பொன்னுச்சாமி, கிழக்கு ஒன்றிய செயலாளர் துரை ராஜாமணி, ராமையா, முன்னாள் யூனியன் துணை சேர்மன் முத்துச்சாமி, மானாமதுரை நகர் மன்ற தலைவர் மாரியப்பன் கென்னடி, துணைத் தலைவர் பாலசுந்தரம்,நகர் மன்ற உறுப்பினர் இந்துமதி(2வது வார்டு ),கல்குறிச்சி பால்பாண்டி, கீழப்பசலை சிவா,சசி பிராசத் உட்பட்ட பலர் பங்கேற்றனர்..

## ஆதவ் அர்ஜுனாவுக்கு நாவடக்கம் தேவை: புதுச்சேரி அதிமுக விமர்சனம்

புதுச்சேரி: ஜூன்.3-

அதிமுக பொதுச்செயலாளரைத் தவறாக ஒருமையில் பேசியது கண்டிக்கத்தக்கது. முதலில் ஆதவ் அர்ஜுனாவுக்கு நாவடக்கம் தேவை என்று புதுச்சேரி மாநில அதிமுக செயலர் அன்பழகன் தெரிவித்துள்ளார்.

புதுவை மாநில அதிமுக செயலாளர் அன்பழகன் இன்று செய்தியாளர்களிடம் கூறியதாவது: புதுச்சேரி வழியாக சென்னை, மகாபலிபுரம், கடலூர் கிழக்கு கடற்கரை சாலை ரயில் வழித்தடம் திட்டம் என்பது புதுச்சேரி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாகும். கடந்த ஆண்டு திட்டத்தை செயல்படுத்த முதல் கட்டமாக மத்திய அரசு சுமார் ரூ 52.13 கோடி நிதி ஒதுக்கி இருந்தது.



இந்த நிலையில் திட்டத்தை செயல்படுத்த ஆரம்ப கட்ட பணிகளைச் செய்ய மாநில அரசின் ஒத்துழைப்பு இல்லாததால் திட்ட நிதியை செலவு செய்யாமல் அப்படியே ரயில்வே வாரியத்திடம் தெற்கு ரயில்வே நிர்வாகம் திரும்ப ஒப்படைத்துள்ளது. எதிர்வினை அரசியல் கண்ணோட்டத்துடன் தமிழகத்தை ஆளும் திமுக அரசு ஒத்துழைக்காமல் தவிர்த்து ஒட்டுமொத்த தமிழ் மக்களுக்கும் தமிழக திமுக முதல்வர் ஸ்டாலின் துரோகம் செய்துள்ளார்.

புதுச்சேரி மக்களின் நீண்ட நாள் கனவுத் திட்டத்தை சிதைந்துள்ளது. புதுச்சேரி மாநிலம் உள்ளடக்கிய இந்த நல்ல திட்டத்தைச் செயல்படுத்த முன்வராத தமிழக திமுக நிலைப்பாட்டைக் கருத்தில் கொண்டு இதில் உள்ள உண்மை நிலையைப் புதுச்சேரி அரசு உடனடியாக மத்திய அரசிடம் தெரிவிக்க வேண்டும்.

இதற்கான உரிய நடவடிக்கையைத் துணைநிலை ஆளுநரும், முதல்வரும் எடுக்க வேண்டும். அதிமுக பொதுச் செயலாளரைத் தவறாக ஒருமையில் பேசியது கண்டிக்கத்தக்கது. முதலில் ஆதவ் அர்ஜுனாவுக்கு நாவடக்கம் தேவை. இவ்வாறு அவர் கூறினார்.




## எம்.பி. சீட்டுக்காக கொள்கையை மாற்றியவர் கமல்: நயினார் நாகேந்திரன் விமர்சனம்

கோவை: ஜூன்.3-

ராஜ்யசபா எம்.பி. சீட்டுக்காக கமல் கொள்கையை மாற்றி விட்டார் என்று பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் கூறினார். கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் அவர் நேற்று கூறியதாவது:

முதல்வர் ஸ்டாலின் மதுரை சென்றபோது தூர்வாரப்படாத கால்வாயை துணியால் மறைத்துள்ளனர். மாநிலத்தில் என்ன நடக்கிறது என்று முதல்வருக்கே தெரியவில்லை. இதுதான் திராவிட மாடல் அரசு. கட்சி தொடங்கும்போது வாரிசு அரசியல் கூடாது என்ற கமல், ராஜ்யசபா சீட் கொடுத்தவுடன் வாரிசு அரசியல் இருக்கலாம் என்கிறார். எம்.பி. சீட்டுக்காக கொள்கையை மாற்றிக்கொண்டார்.

தொழில் நிறுவனங்களுக்கு மின் கட்டணத்தை உயர்த்தக் கூடாது. மத்திய அரசின் திட்டங்களை மறைத்துவிட்டு, எதுவும் செய்யாத அரசாக தமிழக அரசு திகழ்கிறது. ஆளுங்கட்சியை சேர்ந்த ரத்தீஷ் ரூ.300 கோடியில் வீடு, ஆகாஷ் ரூ.500 கோடியில் வீடு கட்டியுள்ளனர். தேர்தலில் திமுக பெட்டி பெட்டியாக பணம் கொடுக்கும் என்று விஜய் கூறுவது உண்மைதான்.

வரும் 22ம் தேதி மதுரையில் நடைபெறும் முருக பக்தர்கள் மாநாட்டில் உத்தர பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத், ஆந்திர பிரதேச துணை முதல்வர் பவன் கல்யாண் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## சிவகங்கை மற்றும் புதுக்கோட்டை மாவட்ட காவல்துறைக்கு கடந்த 2 இரண்டு வருடங்களாக தண்ணி காட்டிய பலே திருடனை கைது செய்த குன்றக்குடி சார்பு ஆய்வாளர் பழனிக்குமார் தலைமைலான தனிப்படையினர்

காரைக்குடி, ஜூன் 02

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகே உள்ள குன்றக்குடி மற்றும் காரைக்குடி வடக்கு காவல் நிலைய சரகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் 40க்கு மேற்பட்டபூட்டி இருக்கும் வீடுகளை உடைத்துகொள்ளையடித்தார் கொள்ளையனை பிடிக்க காரைக்குடி டிஎஸ்பி பார்த்திபன் உத்தரவின் பேரில் குன்னக்குடி காவல் சார்பு ஆய்வாளர் பழனி குமார் தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டு தனிப்படை காவல்துறையினர்

விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த பொன்ராஜ் வயது 43 இவர்மேல் தஞ்சாவூர், ஈரோடு, திருநெல்வேலி, தென்காசி ஆகிய மாவட்டங்களில் பல்வேறு திருட்டு வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையில் கடந்த இரண்டு வருடங்களாக காரைக்குடி, குன்றக்குடி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் இரவு நேரங்களில் பாலினோ காரில் வந்து பூட்டிய வீடுகளை நோட்டமிட்டு 40 க்கும் மேற்பட்ட வீடுகளை உடைத்து தங்கம், வெள்ளி மற்றும் பல்வேறு பொருட்களை திருடி சென்றுள்ளார், 100 க்கும் மேற்பட்ட நீநீமீஸ் கேமராக்களை ஆய்வு செய்த காவல் துறையினர் பொன்ராஜ்யை விருநகரில் வைத்து கை செய்தனர், அவரிடமிருந்து இதுவரை 46 பவுன் தங்கம், வெள்ளி நகைகள், 14 லட்சத்து 70 ஆயிரம் ரொக்க பணம், திருடுவதற்கு பயன்படுத்திய கடப்பாறை, உளி மற்றும் திருட்டுக்கு பயன்படுத்திய பாலினோ கார் ஆகியவையும் திருடிய பணத்தில் வாங்கிய மேலும் இருக்கார்களும் மொத்தம் மூன்று கார்கள் பறிமுதல் செய்யப்பட்டது.








■ காரைக்குடி புனித ஜோசப் கல்வியியல் கல்லூரியின் பத்தாம் ஆண்டு பட்டமளிப்பு விழா, கல்லூரியின் கருத்தரங்க அறையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. முன்னதாக கல்லூரி முதல்வர் தனுஷ்கோடி வரவேற்று பேசினார். இவ்விழாவில் கல்லூரி தலைவர் வி. ஜோசப் தலைமை தாங்கினார் அழகப்பா பல்கலைக்கழக தொலைதூர மற்றும் ஆன்லைன் கல்வி மைய இயக்குனர் பேராசிரியர் முனைவர் கண்ணபிரான் அவர்கள் கலந்து கொண்டு பட்டமும், கேடயமும் வழங்கி சிறப்புரையாற்றினார். இவ்விழாவில் 90க்கு மேற்பட்ட கல்வியல் கல்லூரி மாணவர்களுக்கு பட்டம் வழங்கப்பட்டது. விழாவில் கல்லூரி துணைத் தலைவர் மைக்கேல் டிரஸ்ட் உறுப்பினர் திருமதி பிலோமினாள் மற்றும் உதவி பேராசிரியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இவ்விழாவிற்கான ஏற்பாட்டினை புனித ஜோசப் கல்வியல் கல்லூரி வெகு சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தது.



■ மதுரை மாவட்டம் ஒத்தக்கடை அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவியர்களுக்கு பள்ளிக்கல்வித்துறை சார்பில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி மூர்த்தி பாடநூல் புத்தகங்களை வழங்கினார். கடந்தமுறை பள்ளி விழாவிற்கு வருகை தந்தபோது அதிக அளவில் தேர்ச்சி பெற்றால் ரூ 50 லட்சம் பள்ளி வளர்ச்சிக்கு வழங்குவதாக அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் 99 சதவீதம் தேர்ச்சி பெற்ற ஒத்தக்கடை மேல்நிலைப்பள்ளியின் வளர்ச்சி பணிக்கு கிழக்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் இருந்து ரூ 50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து மாவட்ட ஆட்சியரிடம் அனுமதி கடிதம் வழங்கினார்.மாவட்ட ஆட்சித் தலைவர் மா.சௌ.சங்கீதா இ.ஆ.ப., சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ரேணுகா , ஆகியோர் உடன் உள்ளனர்



## சிவகங்கை மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை சார்பில் 50வது நாள் நீர் மோர் பந்தல்

சிவகங்கை, ஜூன்.3-

சிவகங்கை மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை சார்பில் 50வது நாள் நீர் மோர் பந்தலை, காரைக்குடி மாநகர மேயர் சே.முத்து துரை மற்றும் மாநில இலக்கிய அணி செயலாளர், முன்னாள் அமைச்சர் மு தென்னவன் ஆகியோர் திறந்து வைத்தார்கள். அருகில் முதல் நிலை ஒப்பந்தக்காரர் பொறியாளர் செந்தில்குமார், மாநில பொதுக்குழு உறுப்பினர் கே எஸ் ரவி, முன்னாள் நகர் மன்ற உறுப்பினர் சன் சுப்பையா, மாமன்ற உறுப்பினர் சொனா கண்ணன். நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணைத் தலைவர் காரை சுரேஷ் ஏற்பாடு செய்திருந்தார்.

தொடர்ந்து ஐம்பதாவது நாளாக தண்ணீர் பந்தலை நடத்தும் மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணைத் தலைவர் காரை சுரேஷ் அவர்களுக்கு முன்னாள் அமைச்சர் அண்ணன் தென்னவன் அவர்கள் சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்.



## நீரில் மூழ்கி 13 வயது சிறுவன் பரிதாபமாக உயிரிழப்பு

வேலூர், ஜூன்.3-

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதி திருப்பத்தூர் மாதனூர் அருகே, ராட்சத கல்குவாரி கடலில் நீரில் விளையாட சென்ற 13 வயது கிஷோர் என்ற சிறுவன் நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

மாவட்ட நிர்வாகம், வருவாய்த் துறையினர், காவல்துறையினர் தீயணைப்புத் துறையினர் மற்றும் அணைகட்டு உள்ளாட்சித் துறை ஆகிய துறைகள், 13 மணி நேரம் போராடி திணறிய நிலை, ஆர்ப்பாட்டத்திற்கு பிறகு என்டிஆர்எப் அழைப்பு விடுத்து, அரக்கோணம் 4th B- தேசிய பேரிடர் மீட்பு படை மற்றும் உபகரணங்களுடன் 00:15 மணியளவிலிருந்து 15 நிமிடத்தில் 01:00, 1மணி நள்ளிரவில் ராட்சத கல்குவாரியில் 50 அடிக்கும் மேலான ஆழமுள்ள நீரில் பாறைகளுக்கு இடையில் சிக்கியிருந்த சிறுவனை மீட்டனர்... இதுகுறித்து போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## பட்டுக்கோட்டை அருகே மகிழங்கோட்டை கிராமத்தில் தனியார் பட்டா இடத்தை அபகரிக்க முயலும் கோவில் அறங்காவலர்கள்

பட்டுக்கோட்டை ஜூன்.03

தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை அருகே உள்ள மகிழங்கோட்டை கிராமத்தை சேர்ந்தவர் யுவராஜா இவர் சிங்கப்பூர் தொழிலதிபர் இவரது சொந்தம் ஊரான மகிழங் கோட்டையில் இவரது தாய் தந்தை மற்றும் குடும்பத்தார் வசித்து வருகின்றனர் தொழிலாளர் யுவராஜா நேரம்கிடைக்கும் பொழுது சிங்கப்பூரில் இருந்து தனது குடும்பத்தை சொந்த ஊருக்கு வந்து பார்த்துவிட்டு செல்வது வாடிக்கை.இவர் வீடு உட்பட வீட்டைச் சுற்றி 32 சென்ட் இடங்கள் உள்ளது. இந்நிலையில் இவர் வீட்டு அருகே இந்து சமய அறநிலைத்

துறைக்கு சொந்தமான ராஜகோபால சுவாமி திருக்கோயில் உள்ளது கோயிலுக்கு செல்வதற்கு மாற்று பாதை இருந்தாலும் இவரது காலி இடத்தில் கோயிலுக்கு செல்வது கிராம மக்களுக்கு எளிதாக இருந்ததால் அதை பயன்படுத்தி வந்துள்ளனர்.அதனால் யுவராஜா குடும்பத்தார் கோயிலுக்கு வழிபாடு செய்பவர்கள் செல்கிறார்கள் செல்லட்டும் இன்று விட்டு வந்துள்ளனர்.



இந்நிலையில் கோயில் கும்பாபிஷேகம் முன்னிட்டு யாகசாலை அமைப்பதாக இவர்களது காலி இடத்தில் யாகசாலை கட்டி உள்ளனர்.அதன் பின்பு யாகசாலை கட்டுவதற்கு பொருட்கள் வைக்க வேண்டும் என்று ஒரு கட்டுமானத்தை கட்டியுள்ளனர். கும்பாபிஷேகம் முடிந்த பின்பு அந்த பொருட்கள் வைக்க கட்டப்பட்ட கட்டிடத்தை அகற்றாமல் நிரந்தரம் ஆக்கிவிட்டனர் சுமார் 13 சென்ட் மேல் கோவில் அறங்காவலர்களான சிவசுப்பிரமணியன், ராமநாராயணசாமி, செந்தில்குமார்,ஆகிய மூவரும் செய்துள்ளனர், இவர் பலமுறை இந்து சமய அறநிலை துறைக்கு தனது சொந்த இடத்தை கோவில் அறங்காவலர்கள் அபகரிக்க முயல்வதாக புகார் அளித்தும் இதுவரை இவரது சொந்த இடத்தை பக்தர்கள் கோயிலுக்கு செல்லும் வலியை இவர் மீட்பதற்கு அவர்கள் மூவரும் இடையூ றாக உள்ளதாகவும் பொருள்கள் வைக்க கட்டப்பட்ட கட்டிடத்தை இடித்து அகற்றி இவரிடம் ஒப்படைக்காமல் உள்ளதாகவும், அதுமட்டுமல்லாமல் இவர்கள் குடும்பத்துடன் சிங்கப்பூரில் இருந்த பொழுது இவர் வீட்டு அருகே வசிக்கும் செந்தில் என்பவர் சுமார் 5 சென்ட் இடத்தை அபகரித்து வீடு கட்டி உள்ளதாகவும்,இது குறித்து நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளார்.யுவராஜா வழக்கு நடுவில் உள்ளது. இந்நிலையில் வீட்டை சுற்றி காம்பவுண்ட் சுவர் அமைப்பதற்கு யுவராஜா முடிவு செய்து வீட்டுக்கு முன்புறம் சொந்த இடத்தில் வீட்டு முன்பு பக்கம் காம்பவுண்ட் சுவர் தற்போது யுவராஜா கட்டி வருகிறார்.அதற்கும் கோவில் அறங்காவலர்கள் காவல் நிலையத்தில் புகார் அளித்து இவருக்கு இடையூறு செய்துள்ளனர் அதன் பின்பு தனது கையில் உள்ள ஆவணங்களை எடுத்து காவல் நிலையத்தில் காட்டிய பொழுது காவல்துறை யினர் இவர் பட்டா இடத்தில் இவர் காம்பவுண்ட் சுவர் கட்டுவது தெரிந்து கொண்ட பின்பு இவரது இடங்களை ஆக்கிரமிப்பு செய்ய முயலும் அறங்காவலர்களை அறிவுரை கூறி அனுப்பி வைத்துள்ளனர். தனது சொந்த பட்டா இடத்திலேயே தனது குடும்பத்தார் நிம்மதியாக வாழ விடாமல் அறங்காவலர்கள் என்ற போர்வையில் இவர்கள் செய்யும் அக்கிரமங்களுக்கு விடிவு கிடைக்காதா என்று காத்திருக்கிறார்!!!

## தேன்கனிக்கோட்டை கிராமங்களில் ஊர் பெயர் கன்னட மொழியில் மட்டும் இருப்பதால் குழப்பம்!

கிருஷ்ணகிரி, ஜூன்.3-

தேன்கனிக்கோட்டை பகுதி கிராமங்களில் தகவல் பலகைகளில் ஊர் பெயர் மற்றும் தெரு பெயரை தமிழில் எழுத வேண்டும் எனக் கோரிக்கை எழுந்துள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர், தேன்கனிக்கோட்டை, அஞ்செட்டி, உரிகம் பாகலூர், பேரிகை உள்ளிட்ட கிராமங்கள் கர்நாடக மற்றும் ஆந்திர மாநிலத்தையொட்டி உள்ளன. இப்பகுதி மக்கள் தமிழ், கன்னடம் மற்றும் தெலுங்கு மொழியை தாய் மொழியாக கொண்டுள்ளனர். அதேபோல, அரசுப் பள்ளிகளிலும் தெலுங்கு மற்றும் கன்னட மொழி பள்ளிகளும் இயங்கி வருகின்றன.

இந்நிலையில், இக்கிராம பகுதிகளில் ஊராட்சி சார்பில் வைக்கப்பட்டுள்ள தகவல் பலகையில் ஊர் பெயர் கன்னட மொழில் மட்டும் எழுதப்பட்டுள்ளது. இதனால், வெளியூர்களிலிருந்து வரும் தமிழ் மொழி தெரிந்தவர்கள் ஊரின் பெயரை அறிந்து கொள்வதில் சிரமத்தைச் சந்தித்து வருகின்றனர். எனவே, இக்கிராம தகவல் பலகையில் தமிழ் மொழியிலு ம் எழுத வேண்டும் எனக் கோரிக்கை எழுந்துள்ளது.

இது தொடர்பாக சமூக ஆர்வலர்கள் கூறியதாவது: ஓசூர் மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமப்பகுதி மக்கள் பெரும்பாலும் தெலுங்கு மற்றும் கன்னட மொழியைத் தாய் மொழியாக கொண்டுள்ளனர். இதனால், கிராமப் பகுதிகளின் தெருக்கள் மற்றும் கிராமங்களின் பெயர் பலகைகள் கன்னட மொழியில் மட்டும் வைக்கப்பட்டுள்ளன. வெளியூர்களிலிருந்து வரும் தமிழ் பேசும் மக்கள் கன்னட மொழி தெரியாததால் ஊர் மற்றும் தெரு பெயர்களை அறிய முடியாமல், குழப்பம் அடைந்து திணறி வருவதோடு, மற்றவர்களின் உதவியை நாடும் நிலையுள்ளது.

அதேபோல, வணிக நிறுவனங்களிலும் தமிழ் மொழியில் பெயர்கள் இடம்பெறவில்லை. எனவே, இக்கிராமங்களில் உள்ள அனைத்து தகவல் பலகையிலும் தமிழ் மொழியிலும் ஊர் மற்றும் தெரு பெயர்களை இடம்பெறவும், வணிக நிறுவனங்கள் கட்டாயம் தமிழ் மொழியில் பிரதானமாக எழுதவும் மாவட்ட நிர்வாகம், அரசுத் துறை அதிகாரிகளுக்கு உரிய வழிகாட்டுதல் வழங்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## கோட்டப் பொறியாளர் நெடுஞ்சாலை தரக்கட்டுபாடு திடீர் ஆய்வு



■ சிவகங்கை மாவட்டம், இராமநாதபுரம் நயினார்கோவில் அண்டக்குடி இளையான்குடி சிவகங்கை மேலூர் சாலை கி.மீ 76/07278/400 (கோர்ட் வாசல் முதல் சிவகங்கை பைபாஸ்) வரை முதலமைச்சர் சாலை விரிவாக்கத் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் சாலைப் பணிகளை தேவையான தரக்கட்டுபாடு சோதனைகள் மேற்கொண்டு அடித்தளத்தின் உறுதி குறித்து கோட்டப் பொறியாளர் நெடுஞ்சாலை தரக்கட்டுபாடு மதுரை அவர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. உடன் உதவிக் கோட்டப் பொறியாளர் (நெ) தரக்கட்டுபாடு சிவகங்கை மற்றும் உதவிப் பொறியாளர் (நெ) க(ம)ப சிவகங்கை உடனிருந்தனர்.



■ இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் நகராட்சி, வள்ளல்பாரி துவக்கப்பள்ளியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன்,இ.ஆ.ப., அவர்கள் மாணவ, மாணவிகளுக்கு புதிய புத்தகங்கள் மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்கினார். உடன் இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்கள், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொறுப்பு) திரு.ஆர்.பிரின்ஸ் ஆரோக்கியராஜ் அவர்கள் ஆகியோர் உள்ளனர்.





## முதுகுளத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் 1434ம் பசலிக்கான வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், தலைமையில் நடைபெற்றது

ராமநாதபுரம், ஜூன்.3-

இராமநாதபுரம் மாவட்டத்தில் 1434 பசலிக்கான ஜமாபந்தி 20.05.2025 தேதி முதல் 29.05.2025 வரை நடைபெற்றது. இறுதி நாளான 9.05.2025 காக்கூர் உள்வட்டத்திற்கு உட்பட்ட காக்கூர், புளியங்குடி, பொசுக்குடி, கருமல், குமாரக்குறிச்சி, பிரபுக்க;ர் ஆகிய கிராமங்களுக்கு வருவாய் தீர்வாயம் நடைபெறுகிறது. இதில் மேற்கண்ட கிராமங்களின் கிராம கணக்குகளான அடங்கல், பட்டாமாறுதல்கள், உட்பிரிவு மாறுதல்கள், முதியோர் ஓய்வூதியர்கள் பதிவேடு உள்ளிட்ட கிராமக் கணக்குகளை மாவட்ட ஆட்சியர் ஆய்வு மேற்கொண்டார்.

அதனைத்தொடர்ந்து வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் மூலம் 17 பயனாளிகளுக்கு பட்டாமாறுதல் உட்பிரிவு, 10 பயனாளிகளுக்கு பட்டாமாறுதல் (முழுப்புலம்), 07 பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டை, 08 பயனாளிகளுக்கு முதியோர் மற்றும் இதர உதவித்தொகை என மொத்தம் 42 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் வழங்கினார். மேலும் பொதுமக்களிடமிருந்து இலவச வீட்டுமனைப்பட்டா, முதியோர் உதவித்தொகை, பட்டாமாறுதல் மனுக்களை பெற்றுக்கொண்டதுடன், மனுக்கள் மீது உரிய பரிசீலனை மேற்கொண்டு காலதாமதமின்றி நடவடிக்கை எடுக்க அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வின்போது முதுகுளத்தூர் வட்டாட்சியர் கோகுல்நாத் தனி வட்டாட்சியர் (ச.பா.தி) .மரகத மேரி மற்றும் மண்டல துணை வட்டாட்சியர்கள், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



■ வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுகா, குடியாத்தம் புதிய நீதி கட்சியின் நகர செயலாளர் ரமேஷ் இல்லத் திருமண விழா வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் ஏசிஎஸ் ஐயா மற்றும் கட்சியின் செயல் தலைவர் ரவிக்குமார், மாநில இளைஞரணி செயலாளர் ராஜாராம், அக்டோபர் 24 இயக்கம் நிறுவனத் தலைவர் வேலூர் மாநகர பி எம் அப்பு பாலாஜி கலந்து கொண்டு மக்களை வாழ்த்தினர். இந்நிகழ்வில் புதிய நீதி கட்சி மாநகர செயலாளர் பரத், குரு, முருகேஷ், புறநகர் மாவட்ட செயலாளர் பிரம்மமாஸ் செந்தில், ஐ டி விங் பிரவீன் குமார் மற்றும் நிர்வாகிகள் உறுப்பினர்கள் என பலர் நகர செயலாளர் ரமேஷ் இல்லத் திருமண விழாவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.



## காட்பாடியில் ஸ்ரீ பக்த ஆஞ்சநேயர் கோயிலில் தங்க கவச அலங்காரத்தில் இராம பக்தன் அனுமன் !!

### திரளான உள்ளூர் மற்றும் வெளியூர் பக்தர்கள் பங்கேற்று சிறப்பு தரிசனம்!!

வேலூர், ஜூன்.3-

வேலூர் மாவட்டம், காட்பாடியில் உள்ள ஸ்ரீபக்த ஆஞ்சநேயர் கோயிலில் ஆங்கில மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமை முன்னிட்டு, ஆஞ்சநேயருக்கு தங்ககவச அலங்காரம், சிறப்பு பூஜைகள் செய்யப்படுவதை தொடர்ந்து ஜூன் மாதம் 1ம் தேதி காலையில் ஆஞ்சநேயருக்கு அபிஷேகம், வெற்றிலை, துளசி மலர்களால் அலங்காரம், தங்க கவசம், வடைமாலை, மலர் மாலைகளால் அலங்கரிக்கப் பட்டுள்ளனர். இதில் உள்ளூர் மற்றும் வெளியூர் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்து வருகின்றனர். இந்த சிறப்பு அலங்காரத்தை கோயில் அர்ச்சகர் கண்ணன் பட்டாச்சாரியார் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.



## புகழ்பெற்ற பாரம்பரிய கலையான சிலம்பம் கோடைகால பயிற்சி நிறைவு விழா!!

வேலூர், ஜூன்.3-

வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுகா, குடியாத்தம், தாழையாத்தம் தாழை சிலம்பம் பயிற்சி பள்ளி சார்பாக, புகழ்பெற்ற பாரம்பரிய கலையான சிலம்பம் கோடைகால பயிற்சி நிறைவு விழா, சிலம்பம் கலை ஆசான் சிவகுமார் தலைமையில் நடைபெற்றது. இதில் நூற்றுக்கணக்கான மாணவ மாணவிகள் கலந்து கொண்டு பயிற்சி மேற்கொண்ட மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ், மெடல் மற்றும் கோப்பை வழங்கப்பட்டது. சிறப்பு அழைப்பாளராக ஓய்வு வேளாண்மை துறை அலுவலர் விஸ்வநாதன் மற்றும் ரங்க சமுத்திரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் குணாவதி மற்றும் பொறியாளர் ஜான் செல்வமணி ஆகியோர் கலந்து கொண்டு இவ்விழாவை சிறப்பித்தனர். தாழை சிலம்ப பயிற்சி பள்ளியின் தலைவர் எஸ்.கதிரவன் மற்றும் செயலாளர் சரவணன் துணை தலைவர் தரணீஸ்வரன் மற்றும் மாணவ மாணவிகள், பெற்றோர்கள் என பலர் கலந்து கொணடு விழாவை சிறப்பித்தனர்.



■ வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுகா, குடியாத்தம் புதிய நீதி கட்சியின் நகர செயலாளர் ரமேஷ் இல்லத் திருமண விழா, திருத்தணி முருகன் ஆலயத்தில் நடைபெற்ற திருமண விழாவில், முன்னாள் மத்திய அமைச்சரும், பாட்டாளி மக்கள் கட்சியின் மாநிலத் துணைத் தலைவருமான என்.டி.சண்முகம் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்.

## தென்காசி மாவட்டம் கடையநல்லூர் நகராட்சியில் முதல்வர் மற்றும் நகர மன்ற தலைவருக்கு நன்றி தெரிவித்து வாழ்த்து போஸ்டர்

கடையநல்லூர், ஜூன்.3-

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் நகராட்சியில் கடந்த நான்கு ஆண்டுகளில் நடைபெற்ற வளர்ச்சி பணிகள் குறித்து நகராட்சி நிர்வாகத்தின் சார்பில் நான்காண்டு சாதனை பட்டியல் நகர் மன்ற அலுவலகத்தில் முன்பு பிளக்ஸ் போர்டு வைக்கப்பட்டிருந்தது அதனை தொடர்ந்து கடந்த நான்கு ஆண்டுகளில் பொதுமக்கள் அதிகம் பயன்பெற்ற பொது மக்களின் பயனடைந்தோர் மாண்புமிகு தமிழக முதல்வர் திரு ஸ்டாலின் அவர்களுக்கும் தமிழக நகர்ப்புற உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்களுக்கும் அனைத்து திட்டங்களையும் நிறைவேற்றும் பொருட்டு தீர்மானம் இயற்றி தந்த நகர மன்ற தலைவர் முனைவர் மூப்பன் ஹபீபூர் ரகுமான் அவர்களுக்கு கடையநல்லூர் 17 ஆவது வார்டு டாக்டர் அம்பேத்கர் தெரு காலணி மற்றும் பெண்கள் உயர்நிலைப்பள்ளி வடக்கு தெரு பொதுமக்கள் கடந்த



25 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட சிமெண்ட் சாலையை தற்போது பேவர் ப்ளாக் சாலையாக மாற்றி 25 ஆண்டு கால கனவை நனவாக்கியதற்கு நன்றி தெரிவிக்கும் விதமாக முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் தமிழ்செல்வி முருகேசன் முன்னாள் 17 வதுவார்டு கழகச் செயலாளர் தொமுச மத்திய சங்க துணை செயலாளர் ஷார்ப் கணேசன் நாம் தமிழர் கட்சியை சார்ந்த முனியசாமி விடுதலைச் சிறுத்தை கட்சியைச் சார்ந்த பிரமுகர்கள் இளைஞர் மன்றத்தினர் சமுதாய நிர்வாகிகள் கனி லிங்கம் பிரபாகரன் ஆகியோர் நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர் அதேபோன்று பிர்தௌசியா தெருவாழ் பொதுமக்கள் கிருஷ்ணாபுரம் நல்ல குட்டியார் குளத்திற்கு தார்சாலை அமைத்து தந்ததற்கு அந்த நல்லபிரட்டியார் குளத்துப் புறவு விவசாய சங்கத்தின் சார்பிலும் சுவரொட்டிகள் ஒட்டி வாழ்த்து தெரிவித்து வருகின்றனர் வரும் சட்டமன்ற தேர்தலில் நகர மன்ற தலைவர் அவர்களுக்கு போட்டியிட திமுக தலைமை வாய்ப்பு வழங்கினால் ஒட்டுமொத்த நகர மக்களும் ஜாதி மதம் அரசியல் பாராமல் அவரது சேவைகளுக்காக வாக்களிக்க தயாராக உள்ளனர் திராவிட மாடல் ஆட்சிக்கு கடையநல்லூர் நகராட்சியே சாட்சி என்ற வகையில் பிர்தௌஸியாநகர் வாழ் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்றி தந்த திராவிட மாடல் நாயகர் தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் மாண்புமிகு கே என் நேரு அவர்களுக்கும் மற்றும் கடையநல்லூர் நகர மன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர்ரஹ்மான் அவர்களுக்கும் கோரிக்கையை நிறைவேற்றி தந்ததற்காக தங்களின் அன்பை வெளிப்படுத்தும் விதமாக சுவரொட்டி மூலம் நன்றிகளை தெரிவித்து கொண்டனர்.





## அன்காபுத்தூரில் தவெக சார்பில் நடைபெற்ற இலவச பொதுமருத்துவ முகாம்

### மேற்கு மாவட்ட தலைவர் மின்னல்குமார் திறந்து வைத்தார்

அனகாபுத்தூர், ஜூன்.3

செங்கல்பட்டு வடக்கு மாவட்ட தமிழக வெற்றிக்கழகத்தின் சார்பில் சென்னை பல்லாவரம் அடுத்த அனகாபுத்தூர் நூலகம் அருகில் தனியார் மருத்துவமனையுடன் இணைந்து இலவச பொது மற்றும் கண் மருத்துவ முகாம் செங்கல்பட்டு வடக்கு மாவட்ட கழக இணை செயலாளர் க.மதன்குமார் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் சக்கரை நோய் பரிசோதனை ,இரத்த அழுத்தம் ,கண் பரிசோதனை உள்ளிட்ட பல்வேறு மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டது. இம்முகாமில் செங்கல்பட்டு வடக்கு மாவட்ட செயலாளர் மின்னல் குமார் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு முகாமினை துவக்கி வைத்தார்.இதில் மாவட்ட இணை செயலாளர் அனகை க.மதன்குமார் , மாவட்ட பொருளாளர் என்.தம்பிராஜா

மாவட்ட துணை செயலாளர் கே.வி.சுனிதா ரமேஷ், பம்மல் த.கந்தசாமி, மற்றும் கட்சியின் முக்கிய நிர்வாகிகள் தொண்டர்கள் பொது மக்கள் என பலர் கலந்து கொண்டனர்.



■ 'குடியரசு' நூற்றாண்டு நிறைவு விழா நடைபெற்றது. ,இவ்விழாவில் திக கட்சியின் கட்சியின் முக்கிய பேச்சாளர்கள்: ம.கு.வைகரை,சி.செல்வமணி, இரா.குணசேகரன், இரா.பெரியார் செல்வன், தி.என்னாரசு பிராட்லா, சாமி திராவிடமணி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்..



## நந்திவரம் கூடுவாஞ்சேரி உள்ள அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளியில் விலையில்லா நோட்டு புத்தகங்கள், பாட புத்தகங்கள், சீருடைகள் விழா

கூடுவாஞ்சேரி. ஜூன். 3

செங்கல்பட்டு மாவட்டம், நந்திவரம் கூடுவாஞ்சேரியில் உள்ள அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளியில் விடுமுறை முடிந்து பள்ளிக்கு திரும்பும் மாணவிகளுக்கு விலையில்லா நோட்டு புத்தகங்கள், பாட புத்தகங்கள், சீருடைகள், புத்தகப்பை, எழுது பொருள்கள் ஆகியவற்றை செங்கல்பட்டு தொகுதி எம்எல்ஏ வரலட்சுமி மதுசூதனன், நகர மன்ற தலைவர் எம் கே டி கார்த்திக் தண்டபாணி, ஆகியோர் வழங்கினார்கள். இந்த பள்ளியில் பத்தாம் வகுப்பில் மாவட்ட அளவில் அதிக மதிப்பெண் எடுத்து முதலிடம் பிடித்த மாணவிக்கு செங்கல்பட்டு தொகுதி எம்எல்ஏ வரலட்சுமி மதுசூதனன் சால்வை அணிவித்து கௌரவித்து பாராட்டினார். இதில் உள்ளாட்சி பிரதிநிதிகள், தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், மாணவிகள் கலந்து கொண்டனர்.






## ஜெய்பீம் அறக்கட்டளை சார்பில் பள்ளி மாணவர்களுக்கு கோடைகால கல்வி சுற்றுலா

பெரியகுளம், ஜுன்.03

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே தெ.கள்ளிப்பட்டியில் செயல்பட்டு வரும் ஜெய்பீம் அறக்கட்டளை சார்பில் கீழடி அருங்காட்சியகம் மற்றும் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை பார்வையிட கள்ளிப்பட்டியை சேர்ந்த 30 க்கும் மேற்பட்ட பள்ளி மாணவ மாணவிகள் கோடைகால கல்வி சுற்றுலாவாக சென்றனர். இந்த கல்வி சுற்றுலா வாகனத்தை பெரியகுளம் நகர வளர்ச்சி சங்க நிர்வாகிகள் வழக்கறிஞர் மணி கார்த்திக், அன்புக்கரசன் மற்றும் கிராம நிர்வாகி காளியப்பன் ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்தனர்.சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே உள்ள கீழடி அருங்காட்சியகம்,மதுரையில் உள்ள கலைஞர் நூற்றாண்டு நூலகம் மற்றும் மதுரை பன்னாட்டு விமான நிலையம் ஆகியவற்றை மாணவர்கள் பார்வையிட்டனர்.தேனி வடக்கு மாவட்ட திமுக விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் எம்.பி.கே.கார்த்திக் கல்வி சுற்றுலா வாகன நிதியுதவியும்,மதுரை உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர் முருக கணேஷ் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தினை பார்வையிடவும்,இரவு உணவு வழங்கியும் சிறப்பித்தனர்.இந்நிகழ்வில் ஜெய்பீம் அறக்கட்டளை நிர்வாகிகள் ரெங்கநாதன்,அருண்,பழனியப்பன்,பாண்டியராஜன்,முருக பாண்டி,ஹேமா,சமூக ஆர்வலர் சுசி.மணிவாசகம், சிறப்பு பயிற்சி ஆசிரியர்கள் கனிமுத்து,லட்சுமி விசாகன் ஆகியோர் கலந்து கொண்டு ஏற்பாடு செய்திருந்தனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161